[1983 பிப்ரவரி 8

தாமரைக்குளம் இராசாபுரம் இடையே பொருந்தலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 182—திரு என். பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம் தாமரைக்குளம் இராசாபுரம் இடையே செல்லும் பொருந்தலாற்றில் மேம்பாலம் கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இப்பணி அங்கீகரிக்கப்பட்ட எந்தவித திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும், இப்பணியை 'மாநில சாலைகள்' திட்டத்தின் கீழ் பாகம்—2, 1983–84 ஆண்டில் சேர்ப்பிக்க அரசின் நிதி வளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்கப்படலாம்.

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி வட்டம், தாமரைக்குளம்இராசாபுரம் இரண்டு சிறிய ஊர்களுக்கு இடையே செல்லக்கூடிய பெரிய ஆறு இருப்பதால் மழை காலங்களில் மக்கள் ஒரு வாரம் 15 நாட்கள் சாமான்கள் வாங்கக்கூட வெளியே போக முடியாத நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக 1980 ஆம் ஆண்டே 23 லட்சம் ரூபாய் எஸ்டிமேட் போட்டு அரசாங்கத்திற்கு வந்து பார்ட் 2 ஸ்கீமிலே சேர்க்கப்பட்டது, பின்னாலே அது எப்படி பின்னுக்குத் தள்ளப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதிப்பீடு ரூ. 23 லட்சம் அல்ல, ரூ. 33 லட்சம். அது பின்னுக்கு தள்ளப்படவில்லை, இப்போது அதே நிலையிலேயே தான் இருக்கிறது. ஆகவே, பரிசீலனை செய்து எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலம் மிக முக்கியமான பாலம். இதற்காகவே ஒரு கமிட்டி அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கூட பல மனுக்கள் வந்திருக்கின்றன. இந்த ஆண்டு பட்ஜட்டிலேயே இதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதித் தான் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா அல்லது இன்னும் கொஞ்சம் தள்ளிப்போடலாமா என்பது பரிசீலனையில் உள்ளது.